1992 மார்ச் 25]

விரைவாக அடைத்தால் சுமார் ஐந்தாயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதியைப் பெறும். ஆகவே கேரள அரசுடன் துரிதமாக பேச்சு வார்த்தையை நடத்தி அந்த உடைப்பை விரைவில் அடைத்தால் என்னுடைய தொகுதிக்கு பாசன வசதி ஏற்பட வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, துரிதமாக நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, எஸ், கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உள்ளார் நீர்த் தேக்கத் திட்டத்தைப் பற்றி தெளிவான விளக்கத்தைத் தந்திருக்கிறேன். நில நிர்வாக ஆணையாளருடைய அறிக்கை வந்ததற்குப் பின்னாலே, இந்தத் திட்டம் ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருப்பதால், நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுக்கும், செண்பகவல்லி அணைத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, அது இரண்டு மாநிலங்களுடைய பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், நாம் நம்முடைய பங்குக்கு நம்முடைய பணத்தைச் செலுத்தி இருக்கிறோம். அந்த அரசை நாம் நிர்ப்பந்தப்படுத்த முடியாது, வேண்டுகோளாகத்தான் சொல்ல முடியும். கடிதம் மூலம் எழுதி யிருக்கிறோம். தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண் டிருக்கிறோம், அதை உடனடியாக சீர்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறோம், நீண்ட நாட்களாகக் கிடப்பிலே போடப் பட்ட பிரச்சினை என்று நான் சொன்னேன். நம்முடைய அரசு பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னாலேதான் கேரள அரசு செவி சாய்த்திருக்கிறது. அதற்கான கடிதமும் 12-9-1991-ல் வந்திருக் கிறது. ஆகவே கிடப்பிலே போடப்பட்ட திட்டங்கள் அனைத் தும் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே நிறை வேறும் இந்த நேரத்தில் இந்த செண்பகவல்லி அணைத் திட் டத்தை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்ற உறுதி யினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 347. திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

347—

திருமணஞ்சேரி பாசனக்கால்வாய் சீர்செய்தல்,

* 4267 திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் மயிலாடு துறை தாலுகா திருமணஞ்சேரி பாசன மெலன் வாய்க்கால் தூர்ந்துபோய் உள்ளதை புல்டோசர் மூலம் வெட்டித் தர அர சிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 மார்ச் 25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மைலன் வாய்க்கால் காவிரியின் இடது கரையில் பிரிந்து சுமார் 8.7 கி.மீ. சென்று ஏறத்தாழ 3,044 ஏக்கர்களுக்கு பாசன வசதி அளிக்கின்றது. இதில் தூர்ந்து போயிருந்த தலைப்பு பகுதி 6 கி.மீ. வரை கடந்த கோடையிலே குடிமராமத்து திட்டத்தின் கீழ் பராமரிப்பு செய்திருக்கிறோம், எனவே தற்போது புல்டோசர் மூலம் அந்தப் பகுதியை சீர்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

முற்பகல் 10—15

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டம் விவசாயத்தை முழுவதும் நம்பியுள்ள மாவட்டம். அந்த மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நல்லதொரு தீர்வு கண்ட தங்க மனம் கொண்ட தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வாயார மட்டுமல்லாமல் மனதாரவும் நன்றி செலுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்கள் விவசாய உற்பத்தியிலும் மாநிலத்திலே முதலிடம் வகிக்கிறார்கள். அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற வகையில் இந்த மாவட்டத்திலுள்ள பெரும்பாலான தூர்ந்து போயுள்ள பாசனக் கால்வாய்களை புல்டோசர் மூலம் வெட்டித் தர வேண்டும் என்று அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். அதேபோலத்தான் பராமரிப்புப் பணியிலே அந்த வாய்க்கால் வெட்டிக் கொடுக்கப்பட்டாலும் முழுமையாக புல்டோசர் வைத்து வெட்டிக் கொடுத்தால் தான் நிரந்தரத் தீர்வு காண முடியும். அங்கே அடிக்கடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுகின்ற நேரத்தில் இதுபோன்ற வாய்க்கால்கள் வெட்டிக் கொடுத்தால் தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள். நான் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நினைவுபடுத்துவதைப் போல வைத்துக் கொள்ளக் கூடாது. கேள்வியாகத்தான் கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஆசைமணி: எனவே, மீண்டும் அந்த வாய்க்கால்களை புல்டோசர் மூலம் வெட்டிக் கொடுத்து விவசாயிகளினுடைய குறை தீர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி வளர்ச்சிப் பணிகள் திட்டக் கோட்டம் மூலம்—பிரதான வாய்க்காலின் தூரம் 8.75 கிலோ மீட்டர்—இதிலே 6.7 கிலோ மீட்டர் வரை லைனிங் பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. மேலும் இந்த ஆண்டு ஏறத்தாழ

1992 மார்ச் 25]

6.7 கிலோ மீட்டரிலிருந்து 7.3 கிலோ மீட்டர் வரை லைனிங் பணி எடுக்கப்பட்டு இருக்கிறது. 1992-93 ஆம் ஆண்டு மீதி இருக்கிற பகுதிகளை எடுத்து லைனிங் வேலை செய்வதற்கு இருக்கின்றோம். பொதுவாக காவிரியை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு பெரிய திட்டம் தயாரிக்கப்பட்டு இன்றைக்கு மைய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இதற்கு இடையிலே அந்த வாய்க்கால் பகுதி எல்லாம் சீரமைக்க வேண்டுமென்று இந்த காவிரி வளர்ச்சிப் பணிகள் திட்டக் கோட்டத்தின் மூலம் பல்வேறு பணிகளை இந்த அரசு செய்து கொண்டு இருக்கின்றது. ஆகவே, அந்தத் திட்டத்தின் கீழே இந்த வாய்க்காலை சீரமைக்கும் பணி முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 348, திரு. கே. பி. மணிவாசகம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

348—

திண்டுக்கல்—மூணாறு சாலை தேசிய நெடுஞ்சாலையாக அறிவித்தல்.

*4765 திரு. கே. பி. மணிவாசகம்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இரு மாநிலங்களை இணைக்கும் இச்சாலையின் இன்றியமையாத் தன்மை கருதி திண்டுக்கல்-மூணாறு உடுமலை வழியாகச் செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உடுமலைப் பேட்டையிலிருந்து மூணாறு செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தும் கருத்துரு தற்சமயம் மாநில அரசிடமோ, மத்திய அரசிடமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. மணிவாசகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு-கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களை இணைக்கும் திண்டுக்கல், மூணாறு, உடுமலைப்பேட்டை வழியாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS